செய்தி வெளியீடு எண்: 888 நாள்: 26.11.2009

**<u>செய்தி வெளியீடு</u>**

# முதலமைச்சர் கலைஞர் அவர்களை தென்னக ரயில்வே பொது மேலாளர் திரு.தீபக் கிரிஷண் சந்தித்தார்!

சென்னையில் உள்ள தென்னக ரயில்வேயின் புதிய பொது மேலாளராக கடந்த 21.11.2009 அன்று பொறுப்பேற்றுக் கொண்டுள்ள திரு. தீபக் கிரிஷண் முதலமைச்சர் கலைஞர் அவர்களை தலைமைச் செயலகத்தில் இன்று (26.11.2009) மரியாதை நிமித்தமாக சந்தித்தார். அப்பொழுது முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அவருக்குத் தம்முடைய நல்வாழ்த்துகளைத் தெரிவித்தார். மேலும் தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் இரயில் திட்டங்களை விரைந்து நிறைவேற்றுவதற்கும், புதிய இரயில் திட்டங்களுக்கு உரிய அனுமதிகளும், நிதியுதவிகளும் மத்திய அரசிடமிருந்து பெற்று அவற்றைச் செயல்படுத்துவதற்கும் முழு ஒத்துழைப்பு நல்குமாறு புதிய பொது மேலாளர் திரு. தீபக் கிரிஷண் அவர்களை முதலமைச்சர் கலைஞர் கேட்டுக் கொண்டார். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் திரு.கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப. அவர்கள் உடனிருந்தார்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—9.